ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ நந்தாவிளக்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நந்தாவிளக்கு ॥

## திருநாங்கூர் மணிமாடக்கோயில்

‡நந்தா விளக்கே! அளத்தற்கரியாய்!⋆
நர நாரணனே! கரு மா முகில் போல்
எந்தாய்⋆ எமக்கே அருளாய் என நின்று⋆
இமையோர் பரவும் இடம்⋆ எத்திசையும்
கந்தாரம் அந்தேன் இசை பாட மாடே⋆
களி வண்டு மிழற்ற நிழல் துதைந்து⋆
மந்தாரம் நின்று மண மல்கு நாங்கூர்⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (1)

முதலைத் தனி மா முரண் தீர அன்று⋆
முது நீர்த் தடத்துச் செங்கண் வேழம் உய்ய⋆
விதலைத்தலைச் சென்றதற்கே உதவி⋆
வினை தீர்த்த அம்மான் இடம்⋆ விண்ணணவும்
பதலைக் கபோதத்தொளி மாட நெற்றிப்⋆
பவளக் கொழுங்கால பைங்கால் புறவம்⋆
மதலைத் தலை மென் பெடை கூடு நாங்கூர்⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! (2)

கொலைப் புண் தலைக் குன்றம் ஒன்றுய்ய⋆ அன்று
கொடு மா முதலைக்கிடர் செய்து⋆ கொங்கார்
இலைப் புண்டரீகத்தவள் இன்பம்⋆ அன்போ-
டணைந்திட்ட அம்மான் இடம்⋆ ஆள் அரியால்
அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும்⋆
அணி முத்தும் வெண் சாமரையோடு⋆ பொன்னி
மலைப் பண்டம் அண்டத் திரை உந்து நாங்கூர்⋆
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (3)

சிறையார் உவணப் புள் ஒன்றேறி⋆ அன்று
    திசை நான்கும் நான்கும் இரிய⋆ செருவில்
கறையார் நெடு வேல் அரக்கர் மடியக்⋆
    கடல் சூழ் இலங்கை கடந்தான் இடம் தான்⋆
முறையால் வளர்க்கின்ற முத் தீயர் நால் வேதர்⋆
    ஐ வேள்வி ஆறங்கர் ஏழின் இசையோர்⋆
மறையோர் வணங்கப் புகழ் எய்து நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! (4)

இழையாடு கொங்கைத் தலை நஞ்சம் உண்டிட்டு⋆
    இளங்கன்று கொண்டு விளங்காய் எறிந்து⋆
தழை வாட வன் தாள் குருந்தம் ஒசித்துத்⋆
    தடந் தாமரைப் பொய்கை புக்கான் இடந்தான்⋆
குழையாட வல்லிக் குலம் ஆட மாடே⋆
    குயில் கூவ நீடு கொடி மாடம் மல்கு⋆
மழையாடு சோலை மயில் ஆலு நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (5)

பண் நேர் மொழி ஆய்ச்சியர் அஞ்ச வஞ்சப்⋆
    பகு வாய்க் கழுதுக்கிரங்காது⋆ அவள் தன்
உண்ணா முலை மற்றவள் ஆவியோடும்⋆
    உடனே சுவைத்தான் இடம்⋆ ஓங்கு பைந் தாள்
கண்ணார் கரும்பின் கழை தின்று வைகிக்⋆
    கழுநீரில் மூழ்கிச் செழு நீர்த் தடத்து⋆
மண் ஏந்திள மேதிகள் வைகு நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (6)

தளைக் கட்டவிழ் தாமரை வைகு பொய்கைத்⋆
    தடம் புக்கடங்கா விடம் கால் அரவம்⋆
இளைக்கத் திளைத்திட்டதன் உச்சி தன்மேல்⋆
    அடி வைத்த அம்மான் இடம்⋆ மா மதியம்
திளைக்கும் கொடி மாளிகை சூழ் தெருவில்⋆
    செழு முத்து வெண்ணெற்கெனச் சென்று⋆ முன்றில்

வளைக்கை நுளைப் பாவையர் மாறு நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (7)

துளையார் கரு மென் குழல் ஆய்ச்சியர் தம்⋆
    துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும்⋆ முற்றா
இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம்⋆
    விளைவித்த அம்மான் இடம்⋆ வேல் நெடுங்கண்
முளை வாள் எயிற்று மடவார் பயிற்று⋆
    மொழி கேட்டிருந்து முதிராத இன் சொல்⋆
வளை வாய கிள்ளை மறை பாடு நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (8)

விடையோட வென்றாய்ச்சி மென் தோள் நயந்த⋆
    விகிர்தா! விளங்கு சுடர் ஆழி என்னும்⋆
படையோடு சங்கொன்றுடையாய்! என நின்று⋆
    இமையோர் பரவும் இடம்⋆ பைந்தடத்துப்
பெடையோடு செங்கால அன்னம் துகைப்பத்⋆
    தொகைப் புண்டரீகத்திடைச் செங்கழுநீர்⋆
மடையோட நின்று மது விம்மு நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் வணங்கென் மனனே (9)

‡வண்டார் பொழில் சூழ்ந்தழகாய நாங்கூர்⋆
    மணிமாடக் கோயில் நெடுமாலுக்கு⋆ என்றும்
தொண்டாய தொல் சீர் வயல் மங்கையர் கோன்⋆
    கலியன் ஒலிசெய் தமிழ் மாலை வல்லார்⋆
கண்டார் வணங்கக் களி யானை மீதே⋆
    கடல் சூழ் உலகுக்கொரு காவலராய்⋆
விண் தோய் நெடு வெண் குடை நீழலின் கீழ்⋆
    விரி நீர் உலகாண்டு விரும்புவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥